பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 26 சனிக்கிழமை (•9-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 172

★ ஜனாதிபதி - நோர்வே வெளியுறவு அமைச்சர் சந்திப்பு

# அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்கு

# நோர்வே மத்தியஸ்தம் வகிக்கும்!

## இலங்கைவெளியுறவு அமைச்சு அறிவிப்பு

(நமதுநிருபர்)

அரசுக்குமதமிழீழ விடுதலைப்புலிகளுக்குமான சமாதானமுயற்சியில் நோர்வேஉயர்மட்டஅளவில்பங்குப்றறவுள்ளது.இதற்கானஇணக்கம் நோர்வேயின் வெளிவிவகாரஅமைச்சர் த்ரொப்ஜோன்ஜக்லண்டும் ஜனாதிபதிசந்திரிகாகுமாரதுங்காவுக்கு மிடையே காணப்பட்டுள்ள தாக இலங்கையின் வெளி விவகார அமைச்சு நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கைஒன்றில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிசந்திரிகாவுக்கும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் த்ரொப்ஜோன் ஜக்லண்டுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக எந்தவிதமான கூட்டறிக்கையையும் இதுவரை வெளியிடப்படாத நிலையில் இலங்கையின் வெளி விவகாரஅமைச்சு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவை நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் சந்தித்துப் பேசிய போது புலிகளை உள்ளடக்கிய சமாதான முயற்சியில் 'உயர் மட்ட அளவில்' நோர்வே பங்குபற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின்இனப்பிரச்சினை தொடர்பாக அண்மைக் காலமாக நிலவிவந்த முட்டுக்கட்டையைநீக்கி, அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தி சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் நோக்குடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரை ஜனாதிபதி சந்திரிகா அழைத்திருந்தார்;

வெளி விவகார அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் இடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருவேறு தாக்குதல் சம்பவங்களில் ஒருபொலிஸ்; 3படையினர்பலி

(வவுனியா)

வவுனியாவில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற இரு தாக்குதல் சம்பவத்தின் போது இரண்டுபடையினரும் பொலிசார் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்;

இரண்டு தாக்குதல் சம்பவங்களும் ஒருமணித்தியாலஇடைவெளியில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

வவுனியாவில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு பிரதே

[8- ஆம் பக்கம் பார்க்க]

## பிந்துனுவெவ படுகொலை சந்தேகநபர்கள் 11 பேரும் விடுதலையாகினர்

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ்க்கைதிகளை படுமோசமாக தாக்கிக்கொல்லப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விகாரமாதேவி பூங்காவில் நேற்று குழுமோதல்

### பூங்காவை நிர்வகிப்பது தொடர்பாக

[கொழும்பு]

கொழும்பு விகாரமாதேவி பூங்காவை நிர்வகிப்பது யார் என்பதில் எழுந்த சிக்கல் காரணமாக நேற்றைய தினம் பூங்காவில் இரண்டு குழுக்களுக்கிடையே மோதல்கள் நடை பெற்றதாக அறிவிக்கப்படுகிறது;

கொழும்பு மாநகரசபை, நகர அபிவிருத்திச்சபை உறுப்பினர்களே இவ்வாறு மோதிக் கொண்டதாகவும், நிலைமையைக் கட்டுப் படுத்த பொலிஸாராலும் முடியாமல் போனதையடுத்து அகப்பட்ட சிலர் மீது பொலிஸார் தாக்குதல் நடாத்தியதாகவும் கூறப்படு

8- ஆம் பக்கம் பார்க்க

## விடுதலை புலிகள் மீதான தடையை அரசு தற்காலிகமாக நீக்கும்!

### அரசியல் அவதானிகள் ஆரூடம்

(கொழும்பு)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் நேரில் வந்து சமாதான நடைமுறைகள் பற்றி பேசுமளவிற்கு அரசின் மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வருவதால் அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீதான தடையை ஓரளவாவது தளர்த்துவதற்கும் தற்காலிகப் போர்நிறுத்தம் செய்வதற்கும் ஆயத்தமாகி வருவதாக அறியப்படுகிறது;

விடுதலைப் புலிகளின் பிரதான கோரிக்கைகளான யுத்தநிறுத்தம் மற்றும் தம்மீதான தடையை நீக்குதல் பற்றி அரசின் முக்

[8- ஆம் பக்கம் பார்க்க]

## மிருசுவில் கொலை வழக்கு அனுராதபுரத்தில்

(கொழும்பு)

மிருசுவில் படுகொலை வழக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றிலிருந்து அனுராதபுரம் நீதவான் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது.

மிருசுவிலில் ஏழு பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 14 படையினரில்ஒருவரான லெப்டினன் கவிந்த திசாநாயக்கா தமக்காக வாதிடுவதற்கு சட்டத்தரணி எவரும் கொழும்பிலிருந்து இங்கு வரமுடியாதிருப்பதால் வழக்கை வேறு நீதிமன்றுக்குமாற்றுமாறு கோரியிருந்தார்.

இவரின் கோரிக்கையை ஆராய்ந்த மேல் நீதிமன்றம் வழக்கை அனுராதபுரத்திற்கு மாற்றியுள்ளது. (ந)

## இளம்பெண் நீதிமன்றில்ஆஜர்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காங்கேசன் தடுப்புமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளம் பெண் ஒருவர் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்;

வேலணையைச் சேர்ந்த

[8- ஆம் பக்கம் பார்க்க]

## வில்பத்தில் விமானம்மீது புலிகள் தாக்கினரா?

வில்பத்து காட்டுப்பகுதியில் பறந்துசென்ற விமானம்ஒன்றின் மீதுவிடுதலைப்புலிகள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று இலங்கைவிமானப் படையினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர் இச்சம்பவம் தொடர்பாக வில்பத்துப் பகுதிமக்கள் தகவல்தருகையில் வில்பத்து வான்பகுதியில் நேற்றுபுகைமண்டலம் ஒன்றுதென்பட்டதாக அப்பகுதிமக்கள் பொலிசாருக்கு தகவல்தெரிவித்துள்ளனர். [8ம்பக்கம்பார்க்க]

## இருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலைச் சேர்ந்த முருகன், விஜி(வயது-15) என்பவரை கடந்த 3 ஆம் திகதி முதலும் .வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராதாகிருஷ்ணன் ஜெனார்தனன் (வயது-18) என்பவரை கடந்த 7ஆம் திகதி முதலும் காணவில்லையெனஉறவினர்களால் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுளளது; (ந-10)

# ஜனாதிபதியை சந்திக்காத தூதுவர் எரிக்சோல்

# சமாதான முயற்சியிலிருந்து ஒதுக்கப்பட்டாரா?

### அரசியல் அவதானிகள் பல்வேறு ஊகம்

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட அழைப்பின் பேரில் கொழும்பு வந்த நோர்வேயின் வெளிவிவகாரஅமைச்சர் த்ரொப் ஜோன் ஜக்லண்ட் சமாதானத்தூதுவர் எரிக் சோல்ஹெய்மின் உதவியின்றி ஜனாதிபதியுடன் தனித்துப் பேசியுள்ளார்.

இப்பேச்சுக்களின் போது தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் புறந்தள்ளப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர்ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா எரிக்சோல்ஹெய்ம் புலிகள் பக்கம் சார்பாக நடந்து கொள்கிறார் என்றும் எனவே இவரை பேச்சுவார்த்தையில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும் ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் சமாதான முயற்சியில் ஈடுபட்டு வந்த சிறப்புத்தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் இப் பேச்சுவார்த்தையின் போது ஜனாதிபதியினால்ஓரம்கட்டப்பட்டாரா அல்லது ஒதுங்கிக் கொண்டாரா என்ற கேள்வி தற்பொழுது கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசிக்கொள்ளப்படுகிறது; (வ)

# யாழ். குடாநாட்டு நலன்புரி நிலையங்களில் 14ஆயிரத்து 896 பேர் தங்கியுள்ளனர்

### அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அறிக்கையில் சுட்டிக்காட்டு

[தென்மராட்சி]

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம், வட.மராட்சி பிரதேசங்களிலுள்ள எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கிவருகின்ற 152 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் 3 ஆயிரத்து 774 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 896 பேர் தங்கியுள்ளனர்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மேமாத குடாநாட்டு நிலைமை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள மனித நேய 'அமைப்புக்களின் ஒன்றியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரியாலை கிழக்கு, கொழும்புத்துறைப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

இக் குடும்பங்கள் பாதுகாப்புப் படையினரின் அனுமதியை எதிர்பார்த்தபடி இருக்கின்றனர். அதேசமயம், தென்மராட்சியில் மீளக் குடியமர 16 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் கூட, மக்கள் மேற்படி பிரிவுகளுக்கு செல்வதில் பெரியளவில் விருப்பம் கொள்ளவில்லை.

மே மாத காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினரால் இருவர் கைது செய்யப்பட்டும் பத்துப் பேர் காணாமலும் போயுள்ளனர். அதே வேளை இம் மாதத்தில் மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு, அச்சுவேலி, மாசார் ஆகிய இடங்களில் மொத்தம் நான்கு பேர் மிதிவெடியில் சிக்குண்டு தமது இடது கால்களை இழந்துள்ளனர்.

(உ-77)

## அமைச்சர் எடுத்த முன்முயற்சியால் சூரியவெளிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர படைத்தரப்பு அனுமதி

(யாழ்ப்பாணம்)

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது, நாவாந்துறை சூரியவெளிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர 512 ஆவது படைப்பிரிவு இராணுவம் அனுமதி அளித்துள்ளது.

அப்பகுதி மக்கள், ஈ.பி.டி.பி யின் யாழ். மாநகரசபை உறுப்பினர் துரைராஜா இளங்கோவிடம் தமது சொந்த வீடுகளில் குடியேற அனுமதி பெற்றுத் தரும்படி அண்மையில் கோரியிருந்தனர்.

இவ் விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து.

கடந்த திங்கட்கிழமை 512 வது கட்டளைத்தளபதியுடன் அமைச்சர் பேச்சுக்களை நடத்தியதன் பேரில் நேற்று முன்தினம் அவ் விடங்களை பார்வையிட்ட இராணுவ அதிகாரிகள் அப்பகுதி மக்களை உடனடியாகக் குடியேற அனுமதித்துள்ளனர்.

(உ-3)

## சுதந்திர ஆணைக் குழு அமைப்பு சாத்தியமானால் மட்டுமே சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு

### ஐ.தே.க. வட்டாரங்கள் கண்டிப்பான அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் சுதந்திர ஆணைக்குழு அமைப்பதற்கு வழங்கும் ஆதரவைப் பொறுத்தே, அரசு விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கான ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி வழங்குமென்று, கட்சியின் அதிகார பூர்வ வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

பொதுச் சேவை, பொலிஸ், தேர்தல் மற்றும் நீதி ஆகிய துறைகளுக்கு நான்கு சுதந்திர ஆணைக் குழுக்களை அமைக்க வேண்டுமென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கோரிக்கைகளுக்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு வழங்கும் ஆதரவைப் பொறுத்தே, அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் நடத்த உத்தேசித்திருக்கும் சமாதானப் பேச்சுக்களுக்கான தமது ஆதரவு தங்கியிருக்கிறதென ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அண்மையில் இந்தியா சென்ற ரணில் விக்கிரமசிங்கா அங்கு, அரசும் விடுதலைப் புலிகளும் பேசுவதற்கு தான் பூரண ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு ஆதரவு வழங்கப்படுவதற்கு கைமாறாக அரசு சுதந்திர ஆணைக் குழு அமைப்பதற்கு ஆதரவு தர வேண்டுமென்பதே உண்மையான கருத்தென கட்சியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமது கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லைஎனவும், தமது நியாயமான கோரிக்கையை அரசு வேண்டுமென்றே புறக்கணித்தால் தாம் வேறு வழியில்லாமல் அரசு, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு விடயத்தை மறுபரிசீலனை செய்யவேண்டி வருமென்று அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புலிகளின் தடை நீக்கம் குறித்து ஐக்கிய தேசியக்கட்சி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முன்வர வேண்டும் என நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

## சிறுவிளம்பரம்

### தேவை

தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றிற்கு பகல் வேலைக்கு ஊழியர் தேவை (பெண்கள் மட்டும்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் தட்டெழுத்து தெரிந்தவர்களுக்குமுன்உரிமைவழங்கப்படும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
இல 77 வேம்படிவீதி யாழ்ப்பாணம். [கி/2084]

## ஐ.தே.க. வினால் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

(கொழும்பு)

அரசாங்கம் தற்போது மேற்கொண்டுவரும் சில நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென்றும் அதற்கு மக்களை தயார் செய்யவேண்டுமென்றும் அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

(வ)

## சடலம் இனங்காணப்பட்டது

(வவுனியா)

வவுனியா சுந்தரபுரத்தில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் பாரதிபுரத்தைச் சேர்ந்த வேல்முத்து கோகுலவாசன (வயது-21) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞரின் தந்தையின் வாக்கு மூலத்தை அடுத்து பதில் நீதவான் எம். சிற்றம்பலம் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்து சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (ம)

## ஊழியர்கள் அதிருப்தி

(ஈச்சமோட்டை)

அரச கூட்டுத்தாபன, திணைக்களங்களிலுள்ள ஊழியர்களுக்கான மேலதிக நேர மற்றும் பிரயாணப்படி பெறுவதற்கான விண்ணப்பங்கள் தமிழ் மொழியில் இல்லாததனால் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்குவதாக ஊழியர்கள் பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இவ் விண்ணப்பப் படிவங்கள் ஆங்கில மொழியில் காணப்படுவதனால்இவற்றை பூரணப்படுத்த முடியாது வேறு ஒருவரின் உதவியை தாம நாட வேண்டியுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

( . 59)

## விபத்தில் சிறுவன் காயம்

[மந்திகை]

வீதியில் சென்று கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

கடந்த ஞாயிறன்று துன்னாலை குடவத்தைப் பகுதியில் நடைபெற்றஇச் சம்பவத்தில் இதே இடத்தைச்சேர்ந்த தர்மகுலசிங்கம் பிரதாப் (வயது 10) என்ற சிறுவனே காயமடைந்து பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

[உ-23]

## இன்று நேர்முகத் தேர்வு

(வடமராட்சி)

பத்திரிகைதுறையில் பயிற்சி பெறுவோருக்கான நேர்முகத் தேர்வு இன்று பி.ப3.00 மணிக்கு அத்தியார்இந்துக் கல்லூரியில் இடம்பெறஇருப்பதாகவும்.

இப்பயிற்சிநெறியில் பங்கு கொள்ள விண்ணப்பிக்கும் திகதி இம்மாதம்16ம்திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தினர்தெரிவித்துள்ளனர்.

[உ.43]

## அடிக்கல் நாட்டல் அடுத்த மாதம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் விஜயகுமாரதுங்காவின் உருவச் சிலை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அடுத்தமாதம் நடைபெறவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

## கொடியேற்றம்

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைபதிஅருள்மிகு ஸ்ரீமகா மாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளன.

(உ-75)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் 13 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதி நாள் மகா சங்காபிஷேகம் நடைபெறும்.

(உ)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர்தர தொழில் நுட்ப நிறுவனத்தில் 2 ஆம் வருட தேசிய ஆங்கில டிப்ளோமா இறுதிப் பரீட்சை எதிர்வரும் 23, 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(உ)

## மாணவர் கவனத்திற்கு

[தென்மராட்சி]

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள் அனைவரையும் 5 ரூபா பெறுமதியான முத்திரையுடன் 11 ஆம் திகதிக்கும் 18 ஆம் திகதிக்குமிடையில் இடம்பெயர்ந்து சரவெட்டியில் இயங்கும் கல்லூரிக்கு நேரில் சமுகமளிக்கும்படி அதிபர் அறிவித்துள்ளார்.

[உ-77]

## தீவகவலய தமிழ்த்தினப் போட்டி

தீவக வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளுள் 12ஆம் திகதிகலைத்திறன் போட்டிகளும் 13ஆம்திகதிஎழுத்தாக்கப்போட்டிகளும் யாழ். காரம்பன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும் என தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## வேள்வி

(யாழ்ப்பாணம்)

நவிண்டில் மொட்டைய தோட்டம் வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் வேள்வியும் ஆலய முன்றலில் இன்று இடம்பெறவுள்ளது.

(உ-104)


## மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் "வலம்புரி" பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில் அண்ணா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி.

இடம்: இணுவில் அண்ணா விளையாட்டுக் கழக மைதானம்.

நேரம்: பி. பகல் 4.30

மோதவுள்ள அணிகள்:

இன்று: அறிஞர் வி. கழகம் எதிர் வளர்மதி வி. கழகம்

நாளை: சிந்து வி.கழகம் எதிர் உதயசூரியன் வி.கழகம்

(கி-2060)



## தேவை

ஆடைகள் வடிவமைப்பதில் (தையல்) அனுபவமுள்ள ஆண்கள், பெண்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ஹப்பி ரெயிலர்ஸ் மாட்,
91,1/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[C/2083]

### சொந்த மண்ணிலே எமது இனம்

# அடிமையாய் வாழும் நிலையைப் போக்கிட

# புலிகளின் ஆட்பலத்தை அதிகரிக்க வேண்டும்

## கலை நிகழ்வில் கரிகாலன் அறை கூவல்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வளர்ச்சியை அவதானிக்கும் அரசு இராணுவத்தினூடாக எமது இளைஞர்களை அழிக்க இரகசியமாக செயற்பட்டு வருகின்றது. இவ்வாறான செயல்முறை எமது இயக்கத்தின் வளர்ச்சியை தடுப்பதற்கான நடவடிக்கையே ஆகும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை பிரதித் தலைவர் கரிகாலன் தெரிவித்தார்.

கோராவெளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி நிறைவு தினமான செவ்வாய்க்கிழமை இரவு ஆலய முன்றலில் நடைபெற்ற கலைநிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர்கூறியதாவது ஆனையிறவுச் சமரில் எமது போராளிகள் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்து மண்ணிற்கு பெருமை தேடித்தந்துள்ளனர்.

ஆனையிறவு முகாமைக் கைப்பற்றுவதற்காக எமது போராளிகள் 18 மாத காலமாக மழை. வெய்யில்பாராது பதுங்கு குழிகளில்இருந்தனர்,

அவ்வாறு இருக்கும்போது உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. வெங்குடாந்திப்பாம்பினை உணவாக உட்கொண்டு தமது விடாமுயற்சியினை தொடர்ந்தவர்கள் இறுதியாக 75 பேர் ஊடுருவித் தாக்குதல் நடத்தி நாற்பதாயிரம் தொகைகொண்ட இராணுவத்தை விரட்டியடித்தனர்.

தற்போது மட்டக்களப்பில் நான்காயிரம் படையினர் உள்ளனர். மாலை ஆறு மணிக்கு பின் வெளியில் நடமாட முடியாத நிலை. பிரசவத்தால் வேதனைப்படும் தாய்மார்களை அவசரமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை. இவ்வாறு சொந்த மண்ணிலே எமது இனம் அடிமைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

எனவே பஞ்சுமெத்தையில் இருந்து கொண்டு எமது விடுதலையைப் பெறமுடியாது. எனவே நாம் ஆட்பலத்தினை பலப்படுத்த வேண்டும்.

இது வரையில் 40 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் சிங்களப் பேரினவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர், எழுபதாயிரம் பொது மக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளார்கள். விடுதலைப் போராளிகள் பன்னிராயிரம்பேர் மாவீரர்களாகியுள்ளனர்.

தற்போது எம்மிடம் 64 பல்குழல் எறிகணை செலுத்தியிருப்பதாகஇராணுவம் விளம்பரம் செய்கிறது. இவ்வாறு எமது வளர்ச்சி ஓங்கி நிற்கிறது.

இந்த நிலையில் எமது பலம் பெருக வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ)

## மல்லாகத்தில் திருட்டு

(மல்லாகம்)

மல்லாகம் சோடாக்கொம்பனி வீதியில் அண்மையில் ஒரே இரவில் இரு வீடுகளில் திருட்டுப்போயுள்ளது.

இவ்விரு வீடுகளில் இருந்தும் சைக்கிள்கள், விலை உயர்ந்த உடுப்புக்கள் ஆகியன களவாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

(உ-12)

## மீனவர் ஒய்வூதியம்

(சுண்டுக்குளி)

மீனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் முதலாவது ஓய்வூதியம் வழங்கும் வைபவம் அண்மையில் யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல் பணிமனையில் இடம்பெற்றது.

பாஷையூரைச்சேர்ந்த மீனவரான ஞானப்பிரகாசம் இந்த ஓய்வூதியத்தை கடற்றொழில் பரிசோதகர் கே. தர்மலிங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்டார். (உ-110)

### புகையிரதத் திணைக்களம்

## தனியார் மயமாவது தவிர்க்க முடியாதது

(கொழும்பு)

புகையிரதத் திணைக்களம் நஷ்டத்திலே இயங்குவதால் அதைத் தடுக்க அதிகாரிகள் போதிய ஒத்துழைப்பு வழங்காவிட்டால், புகையிரத சேவை தனியார் மயமாவது தவிர்க்க முடியாததாகிவிடும் என போக்குவரத்து பிரதியமைச்சர் குமார் வெல்கம தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தில் அமைக்கப்பட்ட பௌத்த மத வழிபாட்டுத் தலத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய அமைச்சர்,

1995 ஆம் ஆண்டிலிருந்து புகையிரதத்திணைக்களம்நஷ்டத்தையே சந்தித்து வருகின்றது.

சென்ற ஆண்டு திணைக்களத்துக்கு 101 கோடி 40 இலட்சம் ரூபா வருமானமாக கிடைத்த போதும், செவினங்கள் 260 கோடி 50 இலட்சமாக இருந்தது என்று மேலும் சுட்டிக்காட்டினார். [உ]

## ஒளிப்பதிவு நாடா அனுப்பும் பணி துரிதகதியில்

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களாகத் தடைப்பட்டிருந்த ஒளிப்பதிவு நாடாக்கள் ஏற்கும் பணி மீண்டும் யாழ். பிரதான தபாலகத்தில் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து,

தினமும் 50 இற்கும் மேற்பட்ட ஒளிப்பதிவு நாடாக்கள் ஏற்கப்படுவதாகவும்.

அவற்றைத் துரிதகதியில் அனுப்புவதற்கான ஏற்பாடுகள்மேற்கொள்ளப்படுவதாகவும்,

நிறையினைக் கருத்திற்கொண்டு வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஒளிப்பதிவு நாடாவுக்கு 250- 400 ரூபாவும், கொழும்புக்கு அனுப்பப்படும் ஒளிப்பதிவு நாடாவுக்கு 50 ரூபாவும் அறவிடப்படுவதாகவும் பிரதமதபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-10)

### மீனவர்பிரச்சினை பற்றிய

## உயர் மட்ட மாநாடு முடிவுகள் திருப்தியில்லை

(கொழும்பு)

யாழ் குடாநாட்டு மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகஆராயும் உயர் மட்ட மாநாடொன்று நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் மீன்பிடி நீரியல் வள அமைச்சர் மகிந்தராஜபக்ஸ தலைமையில்நடைபெற்றது.

யாழ்குடாநாட்டைச்சேர்ந்த 25 மீனவர் சங்கங்களின் 53 பிரதிநிதிகள்இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்களுடன் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீன்பிடித்துறை பிரதியமைச்சர் மில்ஜோஜ் பெர்ணான்டோ பாராளுமன்றஉறுப்பினர்களான வீ ஆனந்தசங்கரி மாவைசேனாதிராஜா, அ. விநாயகமூர்த்தி, தி. மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மீன்பிடிக்கும் நேரத்தை மேலும் அரை மணித்தியாலயத்தால் அதிகரிப்பதாக அமைச்சர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்தார். மேலும் நேரத்தை அதிகரிப்பதானால் பாதுகாப்பு அமைச்சருடன் கலந்தாலோசிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தமக்கு வழங்கப்பட்ட நேர அதிகரிப்புப் போதாதென மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர். (இ)

### இடம் பெயர்ந்த முஸ்லிம்களின்

## நலனைக் கவனிக்க ஆணையாளர் நியமனம்

(கொழும்பு)

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வசித்து வரும் சுமார் 12 ஆயிரம் குடும்பங்களின் துயரங்கள் பற்றி ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட ஆணையாளர் ஒருவரை நியமித்துள்ளார்.

இவ்வாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபை வெளியிட்ட செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரி வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜயவர்த்தனாவின் கீழ் பணியாற்றுவார். (உ)

## இராசி பலன்

9-06-2001
(வைகாசி 26, சனி)
திருதியை மு.ப 10.37 வரை
உத்தராடம் வை 5.09 வரை
ராகுகாலம் 8.52-10.22
நல்லநேரம் 2.52-4 22
சித்தம், சங்கடகர சதுர்த்தி

**மேடம்**
தொழில்நன்மை, முயற்சி கைகூடும். சுபநிகழ்வு, பிறர் உதவி.

**இடபம்**
கட்டுப்படுதல், உடல் உபாதை, பிரயாணம், புது முயற்சி.

**மிதுனம்**
காரியத்தடங்கல், பிரயாணபயம், எதிர்பாராத பிரச்சினை, வியாதி.

**கடகம்**
உல்லாசம், அபூர்வ சந்திப்பு, தனவரவு, மதிக்கப்படுதல்.

**சிங்கம்**
தொழில்விருத்தி, மனமகிழ்ச்சி, சுகவாழ்வு, முயற்சி நன்மை.

**கன்னி**
தாழ்வுநிலை, வியாபாரச் சிறப்பு, நிலைமாறல், காரிய தாமதம்.

**துலாம்**
தன்னம்பிக்கைக் குறைவு, அதிகாரிகள் மனஸ்தாபம், திடீர் நன்மை, ஸ்திரீபீடை.

**விருச்சிகம்**
இனிய சம்பவம், அன்னியர் சந்திப்பு, தனவரவு, சகோதரர் உதவி.

**தனுசு**
வீண் வாக்குவாதம், பொருள் விரயம், முயற்சி தாமதம், மதிப்புக்குறைவு.

**மகரம்**
ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, புதிய பொருள் சேர்க்கை, காரியநன்மை.

**கும்பம்**
வீண் அலைச்சல், சுபசெலவு, அதிகாரம், எதிர்பாராத நன்மை.

**மீனம்**
புகழ், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி நன்மை, தனலாபம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## மறை ஆசிரியர் தெரிவு பரீட்சை முடிவுகள்

(சுண்டுக்குளி)

தேசிய மறை ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி, செல்வி இ. மரிஸ்ரெலா விசேட சித்தியையும், மரியாணி, றொணி லொறின்றா, ஜே. மனோடிற்றி, அருட்செல்வி வி லொறட்டா பிலிப்பையா, ரெட்ணராஜ் ரஜனி, எஸ். வின்ஷன்றாஜ், மேரி இமல்ட்டா, பி. கலிஸ்ட்டா, மேரி லூலியா, ஆர். கனிமொழி, யேசுதாஷன் ஜெயசித்திரா, எ. பஸ்ரியன், பி. சிறீசங்கர் ஆகியோர் திறமைச் சித்தி அடைந்துள்ளனர். பி. மரியாணி, ஜே. மானோடிற்றி, மேரிவலன்றீனா, ஆகியோர் சாதாரண சித்தி பெற்றுள்ளனர். (உ-110)

### பனை தென்னை வள அ. கூ. சங்கம்

## மானிப்பாய் பணிமனையில் மருத்துவ பரிசோதனை

(தென்மராட்சி)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் மானிப்பாய் பணிமனையில் மருத்துவ முகாம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

இம்முகாமில் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு கண்பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அமுக்கம் மற்றும் பொது நலம் பற்றிய பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

யாழ். மருத்துவ பீட மாணவர்கள் இம் முகாமில் அனைத்துப் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். (உ-77)

### வடக்கு-கிழக்கில்

## குடிசன மதிப்பீடு மேற்கொள்ள வேண்டாம்

### விநாயகமூர்த்தி எம்.பி மீண்டும் வலியுறுத்தல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமரச் செய்யும் வரை குடிசனமதிப்பீட்டை மேற்கொள்ளவேண்டாமென அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் நாடாளுமன்றஉறுப்பினர் அ. விநாயகமூர்த்திஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டப்பிரேரணை நீடிப்பதுதொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே விநாயக மூர்த்தி மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

இதேவேளை, மேற்படி விடயம் பற்றி ஏற்கனவே கடிதமூலம் ஜனாதிபதியின் கவனத்திற்கு அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ

### சமூக சேவைகள்

## அமைச்சு அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருவர்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சைச் சேர்ந்த 25 பேர் அடங்கிய குழு ஒன்று எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளதாக செயலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீன்பிடி உபகரணங்கள், மீனவர்களுக்கு வீடமைப்பது தொடர்பான திட்டங்கள், முதியோர் அடையாள அட்டைகள், மூக்குக்கண்ணாடிகள் முச்சக்கரவண்டிகள், ஊன்றுகோல் வழங்குதல் முதலியன இவர்கள் இங்கு வரும் வேளையில் முன்னெடுக்கப்படும் எனவும்.

இவை தொடர்பான பூரண விபரங்கள் ஏற்கனவே இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-10)

க. பொ.த
உயர்தர
மாணவர்க்கான

# உயிரியல்

## பாட வினாக்கள் -17

ஆசிரியர்: கே. சுகந்தன் B. Sc

### மாதிரி அமைப்புக்கட்டுரை வினாக்கள்

**வினா - 1**

(01) நுண்ணங்கிகள் உள்ளடக்கப்படும் 3 பிரதான இராச்சியங்கள் எவை?

(02) நுண்ணங்கிகளுக்கிடையே காணப்படும் 4 வெவ்வேறு போசணை முறைகளைப் பெயரிடுக?

(03) சுவாசத்தில் நுண்ணங்கிகளுக்கும் ஒட்சிசனுக்கும் உள்ள தொடர்பை அடிப்படையாகக் கொண்டு பாகுபடுத்தப்பட்ட வெவ்வேறு உடற்தொழிலுக்குரிய கூட்டங்களைப் பெயரிடுக? உதாரணங்களையும் தருக?

(04) ஏனைய அங்கிகளுடன் ஒப்பிடுகையில் நுண்ணங்கிகள் வழமையாக உயர்ந்த அளவில் அனுசேபத்தினையும் வளர்ச்சி வீதத்தையும் காட்டும். இதற்கான காரணம் என்ன?

(05) PDA இல் வழமையாக வளர்க்கப்படும் நுண்ணங்கி யாது?

(06) PDA தயாரிப்பின் முக்கிய படிகளைத் தருக?

(07) மேற்கூறப்பட்ட வளர்ப்பூடகத்தினைப் பயன்படுத்தி மண்ணிலிருந்து இந் நுண்ணங்கிக் கூட்டத்தை எவ்வாறு பிரித்தெடுக்க முற்படுவீர்?

(08) போசணை ஏகார் தயாரிப்பின் முக்கிய படிகளைத் தருக?

(09) போசணை ஏகாரில் வழமையாக வளர்க்கப்படும் நுண்ணங்கி யாது?

(10) இயற்கையில் நடைபெறும் நைதரசன் சக்கரத்தில் சம்பந்தப்படும் 3 நுண்ணங்கியின் பெயரினைத் தந்து அவை புரியும் இரசாயன மாற்றத்தினையும் தருக?

**வினா - 2**

(01) விலங்குகளில் இலிப்பிட்டின் இரண்டு தொழில்களைத் தருக?

(02) விலங்குக்கல முதலுருமென் சவ்வில் காணப்படும் ஒரு எளிய இலிப்பிட்டைத் தருக?

(03) மனித உடலில் கிளைக்கோஜன் சேமிக்கப்படும் இடங்கள் இரண்டு தருக?

(04) புரதத்தின் துணையான கட்டமைப்பு என்றால் என்ன?

(05) விலங்கு இழையத்தில் புரதம் இருப்பதைக் காட்டக் கூடிய பரிசோதனை ஒன்று தருக?

(06) கலவியத்தம் என்றால் என்ன?

(07) கலப்பிரிவடையாத மனித உடற் கலம் ஒன்று தருக?

(08) கலவயதாதலை விளக்கும் இரு கருதுகோள்களைத் தருக?

(09) நரம்பு என்றால் என்ன?

(10) நரம்பு நாரின் தொழில் யாது?

(11) மனிதனில் உட்காவு நரம்பு முளைக்கும் வெளிக்காவு நரம்பு முளைக்கும் இடையிலான வேறுபாடுகளைத் தருக?

(12) நரம்புக்கணத் தாக்கம் கடத்தப்படுவதில் தொடர்புடைய இரண்டு அயன்களைத் தருக?

(13) சூழலியல் கூம்பகம் என்றால் என்ன?

(14) சூழலியல் கூம்பகத்தின் பிரதான வகைகளைத் தருக?

(15) காட்டால் உயிரின மண்டலத்திற்கு ஏற்படும் இரு நன்மைகளைத் தருக?

16) செயற்கை வளமாக்கியால் நேரடியாகப் பாதிப்படையும் உயிரி ரசாயன வட்டத்தைதத நக?

17) குடித்தொகை என்றால் என்ன?

18) ஒட்டுண்ணியியல் புக்கும் ஓரட்டில் உண்ணிக்கும் இடையிலான வேறுபாடு ஒன்றைத் தருக?

19) order;- H mIPtera இனுள் அடங்கும் இலங்கையில் உள்ள இரு பிரதானமான நெற் பீடைகளைத தருக?

20) இலங்கையில் செந்நிற நீள்மூஞ்சி வண்டு கட்டுப்படுத்தப்பட்ட பிரதானமான முறையைத் தருக?

21) Entamoeba histolytica இன் நிறை உடலி வாழும் இடம் யாது?

22) மேலே 21) இல் குறிப்பிட்ட ஒட்டுண்ணியின் தொற்றும் பருவம் யாது?

23) Plasmodium vivax இன் கீழ்க்காணும் பருவங்கள் மிக அதிகளவில் காணப்படும் இடங்களைத் தருக?

| பருவம் | இடம் |
|---|---|
| பாத்து முளைசசிற்றுயிர் | |
| வித்திச் சிற்றுயிர் | |

24) பல்பரம்பரை தலை முறையுரிமை என்றால் என்ன?

25) மனிதனில் காணப்படும் பல்பரம் பரைத் தலைமுறையுரிமை அடையும் இயல்புகள் இரண்டு தருக?

26) Turner's Syndrome இன் பிறப்புரிமையியல்அடிப்படையைத்தருக?
27) பிறப்புரிமையியலில Hardy- wein- berg இன் விதியின் பயன்பாடு யாது?
28) பிறப்புரிமைப் பொறியியல தொழில் நுட்பத்தில் பிளாஸ் மிட்டின் பயன்பாடு யாது?
29) உணவு வலை என்றால் என்ன?
30) ஒரு மட்டத்தில் இருந்து அடுத்த மட்டத்திற்கு சக்தி கடத்தப்படும் போது இழக்கப்படும் சக்தியின் அளவு யாது?

## விடைகள்

**வினா இல - 13**

**வினா - 1**

1) i) எதயில் அற்ககோல்:- சக்கரோமைசிஸ் செரிவீசியே;
யோக்கட்:- இலக்ரோபசிலஸ்/ஸ்ரெப்ரோகொக்கஸ்
வினாகிரி:- அசிற்றோபக்ரர்/குளுக்கோபக்ரர்
ஸ்ரெப்ரோமைசின்:- ஸ்ரெப்ரோமைசிஸ்
பியர்:- சக்கரோமைசிஸ் செரிவீசியே/சக்கரோமைசிஸ் காள்ஸ்பேயென்சிஸ்
வைன்:- சக்கரோமைசிஸ் எலிப்சோடியஸ்
இலத்திரிக்கமிலம்: இலக்ரோபசிலஸ்
பாண்:- சக்கரோமைசிஸ்
Cheese:- இலக்ரோபசிலஸ்/ஸ்ரெப்ரோகொக்கஸ்
தயிர்: இலக்ரோபசிலஸ்/ஸ்ரெப்ரோகொக்கஸ்
உயிர்வாயு:- மெதனோகொக்கஸ்

ii) எதயில் அற்ககோல்:- சுக்குரோசு→எதயில் அற்ககோல்
யோக்கட்:- இலற்றோசு→இலக்ரிக்கமிலம்
வினாகிரி:- எதயில் அற்ககோல்→அசற்றிக்கமிலம்

iii) ★ மலிவான கீழ்ப் படைகளைப் பயன்படுத்தல்
★ நுண்ணுயிர்கள் விரைவாக இனவிருத்தியடைவதால் கீழ்ப் படைகளை விரைவாக விளைபொருட்களாக மாற்றும்
★ வழமையான சூழல் நிபந்தனைகளில் நுண்ணுயிர்கள் வினைத் திறனுடன் தொழிற்படல்.

iv) அ. புரதம்/சேதனநைதரசன் $\rightarrow NH_4^+$
ஆ. $NH_4^+ \rightarrow NO_2^- \rightarrow NO_3^-$
இ. $NO_3^- \rightarrow N_2$
ஈ. $N_2 \rightarrow$ அமினோஅமிலம்/புரதம்

v) அ. நைதரோசொமோனசு, நைதரோபக்ரர்
ஆ. சூடோமோனசு/பசுலசு
இ. றைசோபியம்/அனபினா/நொஸ்ரொக்
ஈ. குளோஸ்திரிடியம்/அசோற்றோபக்ரர்/அனபினா/நொஸ்ரொக்

vi) a) வேர்ப்பூஞ்சணக் கூட்டம்-பங்கஸ்
b) வேர்ச்சிறுகணு-பக்ரீறியா
c) முருகையுருவேர்-நீலப்பச்சைகள்

**வினா-2**

1) ஒரு பொருளில் உள்ள நுண்ணங்கிகளின் பதியக்கலங்கள, வித்திகள் உட்பட அனைத்துப் பருவங்களையும் முற்றாக அழித்தல் கிருமியழித்தல் எனப்படும்.

i) ஈர வெப்ப முறை:- அமுக்க அடுகலனில் 121 பாகை C இல் 15 இறாத்தல் / சதுர அங்குல அமுக்கம் அல்லது $1 kg/cm^2$ அமுக்கத்தில் 15-20 நிமிடம் வைத்திருக்கபபடும்.
உதாரணம்:- வளர்ப் பூடகம், நீர், பால்

ii) உலர் வெப்ப முறை:- கனலடுப்பில் 160 பாகை C இல் 2 மணித்தியாலம் அல்லது 180 பாகை C இல் ஒரு மணித்தியாலம் வைத்து சூடான வளியைக் கொண்டு கிருமியழித்தல்.
உதாரணம்:- பெத்திக்கிண்ணம், அளவி, குழாயி

iii) திறந்த சுவாலையில் செஞ்சூடாகும் வரை பிடித்தல்
உதாரணம்:- கிருமி புகுத்தும் தடம்
கிருமி புகுத்தும் ஊசி

iv) வடித்தல்:- 0.45 மைக்கிறோ மீற்றர் நுண்துளை அளவுள்ள பக்ரீறியா வடிகட்டிகளைப் பாவித்தல்;
உதாரணம்:- குருதி, நொதியம், விற்றமின்

v) UV கதிர் வீசலுக்கு உட்படுத்தல்;
உதாரணம்:-ஆய்வுகூடம், சத்திரசிகிச்சை அறை

vi) இரசாயனப் பொருட்களான எதிலின் ஒட்சைட், புறப்பியோ லக்டோனைப் பாவித்தல்.
உதாரணம்:- கையுறை, பிளாஸ்டிக்

2) i) a) வினாகிரி உற்பத்தி
b) கொலரா நோயை ஏற்படுத்தல்
c) யோக்கட் உற்பத்தி
d) நைதரசனேற்ற தாக்கத்தில் ஈடுபடல் $[NH_4^+ \rightarrow No_2^-)$
e) மல அமுக்காக்கலின் காட்டி/பிறப்புரிமை பொறியியலில பயன்படும்;
f) உணவு நஞ்சாதலை ஏற்படுத்தும்
g) உணவு நஞ்சாதலை ஏற்படுத்தும், aflotoxin இனைச்சுரககும்
h) உணவு நஞ்சாதலை ஏற்படுத்தி botulism நோயை உண்டாக்கும்;
i) கரட்டில் மென்னழுகலை ஏற்படுத்தும்;
j) நைதரசன் இறக்கம்,
k) சுயாதீன வாழ் நைதரசன் பதித்தல்
l) உருளைக் கிழங்கில் பின்வெளுறல் நோய்;
m) Streptomycion உற்பத்தி;
n) ஏறபு வலியை ஏற்படுததும்;
o) தேயிலையில் கொப்புள வெளுறலை ஏற்படுத்தும்

ii) ★ நோயைத் தோற்றுவித்தல்
★ கனிப் பொருளாககம்,
★ நைதரசன் பதித்தல்
★ நைதரசன் இறக்கம்.
★ வேர்ப் பூஞ்சண ஈட்டம்;

iii) ★ எத்தகைய சூழல் நிபந்தனைகளிலும் தப்பி வாழக் கூடியதாகவும் வளர்ச்சியடையக் கூடியதாகவும் காணப்படும்;

★ உயர் இனப்பெருக்க வீதம் உடையதாகக்காணப்படும்;

★ பல்வேறுபட்ட கீழ்ப்படைப் பதார்த்தங்களையும் தமது சக்தித் தேவைககாகவும் உணவுத் தேவைக்காகவும் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்;

★ $\frac{\text{மேற்பரப்பு}}{\text{கனவளவு}}$ விகிதம் ஒன்றிலும் அதிகமாக இருப்பதால் உயர் அனுசேப வீதமுடையதாக இருத்தல்;

★ இவை மிகவும் சிறியனவாகவும் பாரமற்றும் இருப்பதால் இலகுவில் எல்லா இடங்களுக்கும் பரவல் அடையக்கூடியதாக இருத்தல்.

★ இவற்றில் எல்லாவித போசணை முறைகளும் காணப்படல்; (அடுத்த சனிக்கிழமை தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# நீ செய்யும் நற்செய்கை உனக்கே திரும்பிவரும்

ஒரு குடும்பத்தலைவி, குடும்பத்தினருக்காக சப்பாத்தி தயார்செய்யும் போது, ஒரு சப்பாத்திகூடவே தயாரித்து யாருக்காவது கொடுப்பாள். அதை ஜன்னல் ஓரத்தில் எடுத்துவைப்பாள். ஒருகூனன் எப்போதும் எடுத்துச் செல்வான். நன்றி கூறுவதற்கு பதிலாககீழ்க்கண்டவாறு சொல்லிக்கொண்டே போவான்.

'நீ செய்யும் தீமை உன்னுடனே தங்குகிறது. நீசெய்யும் நன்மையோ உனக்சே திரும்பக் கிடைக்கிறது' ஒவ்வொரு நாளும் இதேபோல கூறிச் செலவான். அந்தப் பெண்மணிக்கு எரிச்சல் அதிகரித்தது. 'நன்றியாக ஒரு வார்த்தைகூடக்கூறுவதில்லை எதையோஉளறிக்கொண்டே செல்கிறான். அது என்னவென்றே புரியவில்லை' என்று நினைத்தாள்,

தவறாக அவனை எடைபோட்டதால் அவனை ஒழித்துக் கட்டவேண்டும் என்று, ஒரு சப்பாத்தியில் நஞ்சினைக் கலந்தாள். ஜன்னலில் வைக்கும் சமயத்தில் 'என்ன காரியம் செய்யத் துணிந்தேன்' என்று தன்னையே கண்டித்து, அந்த சப்பாத்தியை நெருப்பில் போட்டுவிட்டு இன்னொரு சப்பாத்தியை தயார்செய்து அதை ஜன்னலோரத்தில் வைத்தாள். அந்தக்கூனன் வழக்கம் போலவே வந்து, அந்தச் சப்பாத்தியை எடுத்துக்கொண்டு, மகிழ்ச்சியுடன் அந்த வார்த்தைகளை முணுமுணுத்துக்கொண்டு சென்றான். இந்தப் பெண்மணியின் மனதில் நடந்த குருஷேத்திரப் போரைப்பற்றி அவனுக்குத் தெரியாது.

ஒவ்வொரு நாளும்யன்னலோரத்தில் சப்பாத்தியை வைக்கும் போது, அந்தப் பெண்மணி வெளிநாடுசென்றிருக்கும் தன்மகன் பாதுகாப்புடன் திரும்ப வேண்டுமென்று வேண்டிக் கொள்வாள்.

அன்றுமாலை வாயிற்கதவை யாரோ தட்டினார்கள். கதவைதிறந்தாள், அவள்மகன் நின்றான் அவனது உடை கந்தலாயிருந்தன: பலவீனமாக அவன் காணப்பட்டான். 'அம்மா இங்கு நான் வந்து சேர்ந்ததே அதிசயமாகும்! இங்கு வருவதற்கு முன் நான் பசிதாங்காது வழியில் உட்கார்ந்து விட்டேன். அப்போது ஒரு வயதான கூனன் சென்று கொண்டிருந்தார் அவனை நோக்கி எனக்கு ஏதாவது உணவுகொடுங்கள்'' என்றேன் அவர் தன்னிடமிருந்த ஒரு சப்பாத்தியை எனக்கு கொடுத்தான். கருணையுடன் என்னை நோக்கி 'இதைத்தான் நான் தினமும் உண்கிறேன். இன்று என்னைவிட உனக்குத்தான் பசி அதிகம்' என்றான்.

இதைக்கேட்டதும், தாயின் முகம் வெளுத்தது. நிற்க முடியாமல் கதவோரத்தில் சாய்ந்தாள் அன்று மட்டும் நஞ்சு கலந்த சப்பாத்தியை வைத்திருந்தால் தன்மகன் இறந்திருப்பான் என்றுகலங்கினாள். நல்ல வேளையாக கடவுள் எனது மனச்சாட்சியை தூண்டியதால் நான் அவ்வாறு செய்யவில்லை என்று நினைத்தாள். இதுவரையில் அரைகுறையாகக் கேட்ட கூனன் கூறியவாக்கியங்களின் பொருள் அப்போது விளங்கியது'' நீ செய்யும்தீமை உன்னுடனே தங்குகிறது' நீ செய்யும் நன்மையோ உனக்கே திரும்பக் கிடைக்கிறது'';

நீர்வையூர் வெ-சுதர்சினி

# தனி ஒரு இனத்திற்கு அரசுசேவைபுரியக்கூடாது

## ஸ்ரீ விமலநாயக்கதேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு சகல இனங்களினதும் நலன்களுக்காகவும் சேவையாற்ற வேண்டுமேயன்றி ஒரு இனத்திற்கு தனியான விதத்தில் சேவைசெய்யக்கூடாது என்று கெத்தம்பே விஹாரையின் பிரதம குருவண. கெப்பிட்டிகொல்ல ஸ்ரீ விமலநாயக்கதேரர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர் ரவூப்ஹக்கீமின் தனி முஸ்லிம் மாவட்டக்கோரிக்கைக்கு அரசு பணிந்துவிடக்கூடாது,

இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் இவ்வேளையில் அமைச்சரின் கோரிக்கையானது இன்னுமொரு இனமான முஸ்லிம்களுடன் பிரச்சினைக்கு வழிவகுத்துவிடும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். மத்திய மாகாண அமைச்சர் தென்னக்கோன் ஸ்ரீ.ல.சு. கட்சியின் இளைஞர் அமைப்பு தலைவராக நியமிக்கப்பட்டதற்கு ஆசிகள் வழங்கி உரையாற்றும் போதே ஸ்ரீவிமல நாயக்கதேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார் (உ)

# வீதிப் போக்குவரத்து கண்காணிப்புப் பணியில் பொலிஸார் ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்திபோக்குவரத்தைச் சீராக்கும் வகையில் பொலிஸார் தகுந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்;

நகரின் முக்கிய சந்திகளில் நின்று போக்குவரத்துச் செய்யும் பொது மக்களை நெறிப்படுத்தி வருவதுடன், போக்குவரத்துப் பற்றிய விளக்கங்களையும் வழங்குகின்றனர்.

வெளியிடங்களிலிருந்து நகரிற்கு வரும் வாகனங்கள் கஸ்தூரியார் வீதியையும், நகரிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் வாகனங்கள காங்கேசன்துறை வீதியையும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதே வேளை, வீதியில் சைக்கிள்களில் சமாந்தரமாகக் கதைத்துக் கொண்டு செல்பவர்களும் எச்சரிக்கை செய்யப்படுவதை அவதானிக்க முடிகின்றது.(உ-104)

## கொடுப்பனவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தித் தொண்டர்களுக்கான கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டக் கட்சி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (உ-3)

## தீவகப் பகுதிகளுக்கான

# மிருக வைத்திய அலுவலகத்தில் போதிய உத்தியோகத்தர் இல்லை

(ஊர்காவற்றுறை)

வேலணை மிருக வைத்திய அலுவலகத்திற்குப் போதிய அளவு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாமையால், அதன் பணிகளை உரியவகையில் பெறமுடியாதுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி மிருக வைத்தியசாலையே வேலணை, நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளுக்கான மிருக வைத்திய சேவையை வழங்க வேண்டியுள்ளது.

ஆனாலும் இங்குகால்நடை வைத்தியர்ஒருவரும், கால்நடை அபிவிருத்திப்போதனாசிரியர் ஒருவருமே பணியாற்றி வருவதுடன்,

குறித்த அலுவலகத்திற்கு வாகன வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (உ-75)

## தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு

(புலோலி)

கல்வித் திணைக்களம் வடக்கு-கிழக்கு மாகாணமட்டத்தில் நடாத்திய ஆங்கிலத்தினப் போட்டிகளில் பார்த்தெழுதல் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலை மாணவி செல்வி அன்ரோனி ஜசிந்தா (ஆண்டு 8) 1ஆம் இடத்தையும் செல்வி சங்கரி செந்தில்வேல்[ஆண்டு9]2ஆம் இடத்தையும் பெற்று தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (உ-52)

## யெகோவாவின் சாட்சிகள் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டார மாநாடு இன்றும் நாளையும் யாழ். சென்பற்றிக்ஸ் வீதியிலுள்ள லொயலாஸ் கல்யாணமண்டபத்தில் தினமும் காலை9.50 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இம்மாநாடு 'கடவுளை நேசியுங்கள் உலகக்காரியங்களை அல்ல' எனும்பொருளில் நடைபெறவுள்ளது. (இ)

## உழவு இயந்திரம் கொள்வனவு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் கழிவுகள் அகற்றுவதற்காக இரண்டு சில் உழவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

பிரதேசசபை நிதியிலிருந்து ஒரு இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவிற்கு மேற்படி உழவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகப் பிரதேச சபைச்செயலாளர் தெரிவித்துள்ளார்; (உ-23)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தென்னையைத் தாக்கும் மையிட் இனப் பீடைத் தாக்கத்தை கட்டுப்படுத்த பீடைநாசினி விசிறுவதற்கு 9 இலட்சத்து 65 ஆயிம் ரூபாவினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கீடு செய்துள்ளார்;

இந்த நிதியினைப் பயன்படுத்தி, தெங்கு பயிர்ச் செய்கைச் சபையின் யாழ். பிராந்தியக் காரியாலயம் தென்னை மரங்களுக்கு பீடை நாசினி விசிறும் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 71 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பீடைத் தாக்கத்திற்குள்ளாகி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்டுள்ளது. இதனால் தேங்காய் உற்பத்தியில் ஏற்படவுள்ள வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த பீடைநாசினி பாதிக்கப்பட்ட மரங்களுக்கு விசிறப்படவுள்ளது; (உ)

# இந்திய மீனவர்களுக்கு ச. செ. சங்கத்தினால் உடைகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக இலங்கைக் கடலில் புகுந்து மீன் பிடித்தவேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள 11 தமிழக மீனவர்களுக்கு நேற்றுமுன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் உடைகள் வழங்கப்பட்டன,

நெடுந்தீவுக் கடலில் வைத்துக் கைதான மேற்படி மீனவர்கள் மாற்றுடை இன்றித் துன்பப்படுவதாக பொது நிறுவனங்களின் கவனத்தின் கீழ் சிறைச்சாலை வட்டாரங்கள் கொண்டுவந்ததையடுத்தே இவை வழங்கப்பட்டுள்ளன,

யாழ். சிறைச்சாலையில் 50 இந்திய மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## திருமலையில் சடலம்

[திருமலை]

திருமலை செல்வநாயகபுரம் பகுதியில் இனம் தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது;

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளின் பொருட்டுசடலம் திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. [வ]

## கசிப்பு உற்பத்தியாளர் வீட்டை

# கல் எறிந்து தாக்கியோர் ஆட் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கசிப்பு உற்பத்தி செய்தவரின் வீட்டை கல்லெறிந்து தாக்கினார்கள் என்ற குற்றத்தின் பேரில் கைதான அறுவர் கடந்த புதனன்று யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, பதில நீதிவான்சுப்பிரமணியம் அவாகளை தலா 5 ஆபிரம் ரூபா ஆட்பிணையில் செலல அனுமதித்தார்.

கசிப்பு உற்பத்தி செய்த ஒருவரின் வீட்டை கடந்த செவ்வாய்க் கிழமைமுற்றுகையிட்டு, கல்லால் தாக்கினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில், பல்கலைக்கழகமாணவன் ஒருவன்உட்பட,6 பேரை யாழ். பொலிஸார் கைது செய்து, நீதி மன்றில் நிறுத்திய போதே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது; [உ-6]

## சட்டவிரோதமாக

# மாடு வெட்டுதல் கோப்பாயில் அதிகரிப்பு

[கோப்பாய்]

கோப்பாய்மத்தியபகுதியில் சட்ட விரோதமாக இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதில் சிலர் ஈடுபட்டுவருவதாகத் தெரியவருகின்றது,

அதிகாலை வேளைகளில் சன நடமாட்டம் குறைந்த பகுதிகளிலுள்ள பற்றைகளில் இது நடைபெறுவதாகவும்,

கழிவுகள் ஒழுங்காக அகற்றப்படாமையால் சுகாதாரச்சீர் கேடுகள் பெருகி வருவதாகவும் இப்பகுதியிலுள்ள மக்கள கவலை தெரிவிக்கின்றனர்.

வியாபாரத்தில் நட்ட மேற்படுவதாகக் கூறிவலிகிழக்குப் பிரதேச சபையின் அனுமதியுடன் மேற்படி பகுதியில் இயங்கி வந்த மாட்டிறைச்சிக்கடை மூடப்பட்டுளளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

# காப்புறுதி செய்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபைக் கட்டடத்தின் முதலாம் மாடியில் இயங்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின்யாழ். பிராந்தியஅலுவலகத்தில் இந்த ஆண்டு ஆயுள் காப்புறுதிசெய்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக யாழ். பிராந்திய முகாமையாளர் எ. அரியநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்க 5 மாதங்களில் மட்டும் 484 பேர் ஆயுள் காப்புறுதி செய்திருப்பதாகவும்,

இவ்வாண்டில் அபாயக் காப்புறுதி, நம்பிக்கை காப்புறுதி, கடல் அபாயக் காப்புறுதி, கட்டட ஒப்பந்தக் காப்புறுதி, களவு அபாயக் காப்புறுதி, என்பனவும் கணிசமான அளவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

இலங்கை முழுவதிலும் 17 வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களும் 78 கிளைகளும் இயங்கி வருகின்ற போதிலும் காப்புறுதி நடவடிக்கைகளின் முன்னோடியாக யாழ். பிராந்திய அலுவலகம் விளங்கி வருவதாகவும் முகாமையாளர் மேலும் தெரிவித்தார்; (உ-6)

### ★ பிரித்தானிய பொதுத் தேர்தலில் ★

# அமோக வெற்றி பெற்ற தொழிற்கட்சி

# ஆட்சிப் பொறுப்பு மீண்டும் பிளேயரிடம்

(லண்டன்)

**பிரிட்டனில் நேற்று முன்தினம் நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் எதிர்பார்த்தபடியே தொழிற் கட்சி மிகப்பெரும் வித்தியாசத்தில் வெற்றியீட்டியதால் ஆட்சிப் பொறுப்பை மீண்டும் ஏற்கவுள்ளது.**

**இந்த வெற்றியானது 1997 இல் தம்மால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களைச் செயற்படுத்த மக்கள் அளித்த அங்கீகாரம் என பிளேயர் வெற்றிப் பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.**

**பலத்த எதிர்பார்ப்புடன் தேர்தலில் போட்டியிட்டு மண் கவ்விய கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் தமது படுதோல்வியை ஒப்புக்கொண்டு பதவியை இராஜிநாமாச் செய்துள்ளார்**

பிரிட்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ரொனி பிளேயரின் தொழிற் கட்சி அறுதிப் பெரும் பான்மையுடன் வெற்றி ஈட்டி மீண்டும் ஆட்சிப் பொறுப்பைஏற்கவுள்ளது

இதுவரை வெளியாகிய முடிவுகளின்படி பிளேயரின் தலைமையிலானதொழிற்கட்சிக்கு 413 ஆசனங்களும் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு 164 இடங்களும், லிபரல் கட்சிக்கு47 ஆசனங்களும் கிடைத்துள்ளன.

659 ஆசனங்களைக் கொண்ட பிரித்தானியப் பாராளுமன்றில் ஆட்சி அமைப்பதற்கு 330ஆசனங்கள்போதுமானதாகும்.

75 வீதமான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையிலே ஆட்சிப் பொறுப்பு அமைக்கும் தகுதி தொழிற் கட்சிக்கு கிடைத்துவிட்டது.

இந்தத் தேர்தல் வெற்றியானது தம்மால் 1997 இல் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்தும் செயற்படுத்த வாய்ப்பளித்துள்ளதென பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

தொழிற்கட்சியினது நூறு வருட கால வரலாற்றிலே, அடுத்தடுத்து வெற்றியீட்டி இருப்பது இதுவே முதலாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்க்கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் வில்லியம் ஹேக் தமது படுதோல்வியை ஏற்றுக் கொண்டு தனது பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்பொதுத் தேர்தலில் எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

### கொலம்பியாவில்
## மண்சரிவு 15 பேர் பலி

(பொஹோரா)

கொலம்பியாவின் வடமேற்குப் பகுதியில் பெய்த பாரிய மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் 15 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இம் மண்சரிவு காரணமாக 30 இற்கும் அதிகமானோர் காயப்பட்டுள்ளனர் எனவும் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுகிறதுஎனவும்அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

### பொலிஸாரின்
## சூட்டில் இருவர் பலி

(ஜோர்ஜ்ரவுண்)

கயானாவில்உள்ளபொலிஸ் நிலையம் ஒன்றைகலகக்காரர்கள் தாக்க முற்பட்ட போது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டதாகவும் ஐவர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

எனினும் கலககக்காரர்கள் பொலிஸ் நிலையத்தை கற்களால் தாக்கி சேதப்படுத்தியுள்ளார்கள். (உ-9)

# போதையில் தள்ளாடிய இளவரசர்

# முதலில்மன்னரைச்சுட்டுவீழ்த்தினார்

### அரண்மனைப் படுகொலைகளை நேரில் கண்டவர்கள் விபரிப்பு

(காட்மண்டு)

நேபாள அரச குடும்பப்படுகொலைகளை இளவரசர் திபேந்திராதான்செய்துமுடித்தார் என்று சம்பவத்தை நேரில் கண்ட இருவர் கூறியுள்ளனர்.

சம்பவதினம் இரவு உணவுக்குபின் பானங்கள் அருந்திக் கொண்டிருந்த வேளை போர் வீரர் உடையில் வந்த இளவரசர் கையில் இரண்டு தானியங்கித்துப் பாக்கிகளை வைத்திருந்தார். குடிபோதையில் தள்ளாடியபடி இருந்த திபேந்திராவுக்கும் தந்தைக்கும் இடையில் சூடானவாக்குவாதம் நிகழ்ந்தது. இதனையடுத்து திபேந்திரா தானியங்கித் துப்பாக்கியால் சுட்டார். முதலில் கூரையை நோக்கிச் சுட்டுப்பார்த்துக் கொண்ட திபேந்திரா தொடர்ந்துதனது தந்தையை சுட்டார் பின்னர் அவர் அங்குமிங்கும் ஓடி தனது குடும்பத்தவரை குறிபார்த்துச்சுட்டார். என்று சம்பவத்தை நேரில் கண்ட அவ்விருவரும் மேலும் தெரிவித்தனர்.

எனினும்,இளவரசர் தான் இக்கொலைகளைப் புரிந்தார் என்பதை நேபாள மக்கள் நம்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது இதேவேளை புதிய மன்னர் நியமித்துள்ள உயர் மட்ட விசாரணைக்குழுவுக்கு அரசகுடும்பத்தினர் உட்பட்ட சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் அனைவரையும் விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. [உ]

# தடைகள் நீங்கினாலேயே அமெரிக்காவுடன் உறவு

### முஹமத் ஹதாமி அறிவிப்பு

(தெஹ்ரான்)

ஈரான் குடியரசுக்கு எதிரானதடைகள் நீக்கப்படாத வரை அமெரிக்காவுடன் எந்த விதமான உறவும் ஏற்படுத்தப் போவதில்லையென ஈரான் ஜனாதிபதி முஹமத் ஹதாமி திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தெஹ்ரானில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை,நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஹதாமிக்கு எதிராகப் போட்டியிடும் இரு வேட்பாளர்களும் தாம் பதவிக்கு வந்தால் வாஷிங்டனுடன் நல்லுறவைப் பேணப்போவதாக அறிவித்துள்ளனர். (உ-9)

# சிலி சிறைச்சாலையில் சிதைந்த மனித எச்சங்கள் கண்டுபிடிப்பு

### பினோஷே ஆட்சியின் திடுக்கிடும் உண்மைகள் வெளிப்பாடு

சிலியில் முன்னாள் ஜனாதிபதி அகஸ்டோ பினோஷேயின் ஆட்சிக் காலத்தில் இருந்த சிறைச்சாலை ஒன்றில் மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பினோஷேயின் ஆட்சிக் காலத்தில் சிறைவைக்கப்பட்ட பலர் காணாமல் போனது குறித்து விசாரணையாளர்கள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையிலேயே இம் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பினோஷே மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் நீதிபதி ஜுவான் குஸ்மான் தலைமையிலான குழுவே இவற்றைக் கண்டுபிடித்தது. இதேவேளை இதற்கு முன்னரும் பினோஷேகாலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களது உடல்களின் எச்சங்கள் சில வருடங்களுக்கு முன்பு இங்கு கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

### செனட்டர் ஜெவ்வோர்ட்ஸ் கட்சித்தாவல்

# செனட் சபை மீண்டும் ஜனநாயகக்கட்சியின்கையில்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் செனட் சபை மீண்டும் ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க வரலாற்றில் முதல் முறையாக நடைபெற்ற கட்சித் தாவல் சம்பவத்தைத் தொடர்ந்தே ஜனநாயகக் கட்சியினர் மீண்டும் செனட்சபையில்பெரும்பான்மை பெற்றுள்ளனர்.

குடியரசுக் கட்சியில் இருந்த செனட்டர் ஜேம்ஸ் ஜெவ்வோர்ட்ஸ் ஜனநாயகக் கட்சியின் பக்கம் சாய்ந்ததால் ஜனாதிபதி புஷ்ஷின் செயற் திட்டங்களில் தடங்கல் ஏற்பட வாய்ப்புள்ளதென அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-9)

# வீரப்பனின் சகபாடியைப்பிடிக்க உதவினால் 15 இலட்சம் ரூபா

### முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

வீரப்பனின் முக்கிய கூட்டாளியான சேர்த்துக்குழி கோவிந்தனைப் பிடிக்க உதவுபவர்களுக்குபதினைந்துஇலட்சம் ரூபா வழங்கப்படுமென்று தமிழக முதல்வர்ஜெயலலிதா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாதுகாப்பு அதிகாரிகளுடன் மாநாடு நடத்தி விட்டுச்செய்தியாளர் மத்தியில் பேசும் பொழுது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் எல்லைப் பாதுகாப்புப்படையில் ஆய்வாளராக இருந்த விஜயகுமார் விசேட அதிரடிப் படைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும்,

அவரின் கட்டுப்பாட்டின் கீழ் மத்திய அரசின் படைகளும் கர்நாடகஅதிரடிப்படைகளும் இணைந்து கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபட இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே அதிரடிப் படைக்குப்பொறுப்பாகஉள்ள வோல்டர் தேவாரம் பற்றிக் கேட்கப்பட்டபொழுது,மலைவாழ்மக்களும் சிறுபான்மை இனத்தவர்களும் தெரிவித்த கருத்து முரண்பாடுகள்வெளிவந்தது உண்மையென்று முதல்வர் ஜெயலலிதா குறிப்பிட்டார்.

வீரப்பனையும் சகபாடிகளையும் உயிரோடு பிடிப்பதற்கு தமிழ் நாடு வனத்துறையும் வருவாய்த் துறையும் முழு ஆதரவும் வழங்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை விசேட அதிரடிப்படை இருப்பத்தாறாந் திகதி புனரமைப்புச் செய்ய இருப்பதாகவும் விரைவில் கூட்டுநடவடிக்கைதொடங்குமென்றும் மேலும் தெரிவித்தார். (து)

# வயதில் மூத்த கின்னஸ் சாதனையாளர் பிரான்ஸில் மரணம்

(பரிஸ்)

உலகில் மிகவும் வயது முதிர்ந்தவரென கின்னஸ் சாதனைப் பதிவேட்டில் பதியப்பட்ட சாதனையாளரான பெண் கடந்த செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மேரி பிறிமொன்ற் (வயது-115) என்பவரே காலமானவராவர்.

இவர் 1886ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்தவர். தனது 115 ஆவது பிறந்த தினத்தை கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடியுள்ளார்.

இரு திருமணங்கள் புரிந்த போதும் இவருக்குப் பிள்ளைகள் இல்லை. (இ)

முறை செய்து காப்பாற்றும் மக்கட்கு இறையென்று "வைக்கப்படும்.

குறள்

# வலம்புரி

## கோரிக்கை ஒலிக்கட்டும்

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி உடனடியாக சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு தென்னிலங்கையைச் சேர்ந்த 31 அரசசார்பற்ற அமைப்புக்கள் கூட்டாக அரசிடம் கோரிக்கைவிடுத்துள்ளன.

சமாதான நல்லெண்ண நோக்குடன் விடுதலைப் புலிகளால் ஒரு தலைப்பட்சமான முறையில் நான்கு மாதங்கள் அமுல்ப்படுத்திய யுத்த நிறுத்தத்தை அரசு தகுந்த முறையில் பயன்படுத்தத் தவறிய செயலை சாதாரணமாக ஊர் மொழியில் கூறுவதாயின் வலிய வந்த சீதேவியைகாலால்உதைத்தது போல் எனலாம்.

புலிகளின் யுத்த நிறுத்தத்தை அரசு நல்ல முறையில் பயன்படுத்தத் தவறியமை வரலாற்றில் விட்ட பெரும் தவறாகும். இத்தவறை நிவர்த்திக்க வேண்டுமாயின் அதற்கு இருக்கின்ற ஒரே ஒரு பிராயச் சித்தம் புலிகள்மீதான தடையை நீக்குவதே ஆகும்.

அதனை உணர்ந்தே தென்னிலங்கையிலுள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள் கூட்டாக புலிகள் மீதான தடையை நீக்குமாறுகேட்டுள்ளன. இக் கோரிக்கை தனித்து அரச சார்பற்ற அமைப்புகளினுடையது மட்டுமல்ல தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களின் கோரிக்கையும் இதுவே.

உள் நாட்டில் இன யுத்தத்தால் மக்கள் அழிந்து கொண்டிருக்கும் போது, அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதே அரசின் தலையாயகடமையாகும்.

ஆனால் புலிகள் மீதான தடையை நீக்குவதில் அரசு அசமந்தப் போக்கையே பின்பற்றுகிறது. அரசின் அசமந்தப் போக்கிற்கு சில பேரினவாத அமைப்புக்களும் உதவுகின்றன.

எனவே அரசாங்கம் அரச சார்பற்ற நிறுவனங்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்ப்பதுடன்தென்னிலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் வெறுமனே கோரிக்கைகளை முன்வைத்து விட்டு தமது கடமைமுடிந்து விட்டதாகக் கருதாமல், நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்படுவதற்காக அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

அதன் மூலமே அரசுக்கு அழுத்தம் கொடுத்து யுத்தத்திற்கு முடிவு கட்ட முடியும்.

---

திறனாய்வுக்களம்

# நடிப்பதற்கும், படிப்பதற்கும் ஏற்ற வகையில் "மண்வாசனையில் மூன்று நாடகங்கள்" நூல்



காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு தமிழ் மொழியின் எல்லைகளை இன்று விரிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது. முத்தமிழ் என்ற எல்லைக்குள் அடக்கிப் பேசப்பட்டு வரும் தமிழ், அறிவியல் தமிழ், தொழில் நுட்பத் தமிழ் என வளர்ந்து விரிவுபட வேண்டியதன் முக்கியத்துவம் இன்று உணரப்படுகின்றது. ஆயினும் முத்தமிழில் ஒன்றான நாடகத் தமிழ் இன்னும் முழுமையான வளர்ச்சி நிலையை அடையவில்லை என்னும் குறைபாடும் வாய்ப்பாடாகச் சொல்லப்பட்டு வருகின்றது. நாடகம் என்னும் அரங்கக் கலை இன்று நவீன வளர்ச்சிகள் பலவற்றைக் கண்டுள்ள போதும் நூலுருப் பெற்ற நாடகப் பிரதிகள் தமிழில் மிகவும் ஒறுப்பாகவேயுள்ளன. நாடக நூல்களைப் பொறுத்தவரையில் நாடகத் தமிழ் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு நியாயமானதாகத் தோன்றுகின்றது. அரங்கேறும் நாடகங்கள் பெருமளவு நூல் வடிவம் பெற்று வெளிவராமைக்குக் குறிப்பிட்டுச் சொல்லத்தகுந்த காரணங்கள் சில உண்டு. அக் காரணங்களுள் மிக முக்கியமானதொன்றாக கருதத் தகுந்தது, அரங்கிலே கண்டு, கேட்டு முழுமையாக அனுபவிக்க வேண்டிய ஓர் அரங்கக் கலையினை நூல் வடிவில் படிப்பதற்கு மக்கள் தயாராக இல்லாமை என்று சொல்லலாம்.

### மண்வாசனை

தமிழில் நாடக நூல் பிரதிகள் மிகவும் குறைவாக உள்ள இச் சூழ்நிலையில் செல்லையா மெற்றாஸ்மயிலின் 'மண்வாசனையில் மூன்று நாடகங்கள்'' வெளிவந்திருக்கின்றது. இதற்கு முன்னர் வெளிவந்திருக்கும் நாடக நூல்களை முன்னுதாரணமாகக் கொண்டும், மூன்று நாடகங்களை ஒரே சமயத்தில் இலகுவாக வாசகர் மத்தியில் கொண்டு செல்வதற்கு வாய்ப்பாகவும் ஒரு தொகுதியாக இந்நூல் வெளிவந்திருக்கின்றது. இத் தொகுதிக்கு சூட்டப்பெற்றுள்ள ''மண்வாசனையில் மூன்று நாடகங்கள்'' என்னும் பெயர் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். ஈழத்து இலக்கிய வரலாற்றில் அறுபதுகளில் மண்வாசனை பற்றிப் பெரிதும் பேசப்பட்டு வந்துள்ளது. அக் காலத்தில் வலியுறுத்தப்பட்ட ''மண்வாசனை'' யோடு இந்த நூலுக்கான பெயர் பொருந்தி வருமெனக் கொள்ள முடியாது. இந்த மண்ணை குறிப்பாக யாழ்ப்பாணத்து மண்ணை களமாகக் கொண்ட நாடகங்கள் இவைகள் என்பது இதன் தொனிப் பொருள்.

இந்த நூலில் இடம்பெறும் மூன்று நாடகங்களில் ''வெடியரசன்'' நாடகம் ''வரலாற்று இலக்கிய நாடகம்'' எனவும் ஏனையவை இரண்டும் ''வரலாற்று நாடகம்'' எனவும் பிரத்தியேகமாக குறிப்பிடப்படுகின்றது. ''வெடியரசன்'' நாடகம் புராண இதிகாசக்கதை போக்கினைச் சொல்லும் இயல்பினதாகக் காணப்படுகிறது. ஏனைய நாடகங்களை விட காலத்தால் முந்தியதாக இருப்பதும், வரலாற்று ஸ்திரமின்மையும் காரணமாகவே வரலாற்றுடன் இணைத்து இலக்கிய நாடகம் என ஆசிரியர் குறிப்பிட வேண்டிய அவசியம் நிகழ்ந்துள்ளது. நாடகங்கள் அனைத்துமே நூலுருப் பெற்ற பின்னர், அப் பிரதிகள் இலக்கியங்கள் ஆகிவிடுகின்றன என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய இன்னோர் விடயம்.

**தெணியான்**

### உரை நடை நாடகம்

வெடியரசன் நாடகத்தில் கிருஷ்ணன் சூத்திரதாரியான முக்கிய பாத்திரமாக விளங்குகின்றான். சகோதரர்கள் ஐவர் பஞ்சபாண்டவர்கள் போல இந்த நாடகத்திலும் பாத்திரங்களாக இடம் பெறுகின்றார்கள். சோழர்களின் படையெடுப்புக்கு காரணமாக சிலப்பதிகாரக் கண்ணகி கதை வெடியரசன் கதையோடு இணைக்கப்படுகிறது. இது தான் இந்த நாடகத்தின் மூலம். நாடக ஆசிரியர் மெற்றாஸ்மயில் சிறப்பான ஒரு நாடகமாக ஆக்கித் தந்துள்ளார். 'இலக்கிய நாடகம்' என குறிப்பிட்டுள்ளமைக்கு இணங்க தேர்ந்தெடுத்த செழுமையான செந்தமிழ் மொழி நடையில் இந்த நாடகத்தை ஆசிரியர் ஆக்கியுள்ளார். சில இடங்களில் கவிதைத்தன்மை வாய்ந்ததாக இந்த உரை நடை நாடகம் காணப்படுகிறது. நெடுந்தீவில் காணப்படும் எச்ச சொச்சங்களான அரண்மனை, குதிரைலாயம் என்பவற்றின் புகைப்படங்கள் நூலில் இணைக்கப்பட்டுள்ளன. இவைகள் வெடியரசன் காலத்திற்குரியவை எனவும், வெடியரசன் வரலாற்றுச் சான்றாதாரங்கள் எனவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். நெடுந்தீவில் காணப்படும் இடிபாடுகள் வரலாற்று அடிப்படையில் வெடியரசன் ஆட்சிக் காலத்துக்குரியவை என நிறுவப்படாத விடத்து, இன்னொரு ஆட்சியாளனின் ஆட்சிக் காலத்து இடிபாடெனவும் அவற்றைக் கொள்ளலாம் அல்லவா?

### சங்கிலியன்

போர்த்துக்கேயர் காலத்தில் நல்லூரில் இருந்து ஆட்சி செய்தவன் சங்கிலியன். இவனது வரலாற்றைப் பலர் இதுவரை நாடக நூலாக ஆக்கித் தந்துள்ளனர். பேராசிரியர் கணபதிப்பிள்ளை, சொக்கன் ஆகியோர் இவர்களுக்குள் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்தவர்கள். தமிழ் நாட்டு கட்டப்பொம்மனின் சினிமாச் சாயலில் யாழ்ப்பாணத்து சங்கிலியனை உருவாக்கிக் காட்டுவதற்கு நாடக ஆசிரியர்கள் சிலர் முயன்றிருக்கின்றனர். கட்டப்பொம்மனுக்கு இருண்ட பக்கமொன்று இருப்பது போல சங்கிலியனுக்கும் மறுபக்கம் ஒன்று உண்டென்பதை மூதறிஞர் சொக்கன் அவர்கள் வரலாற்று நேர்மையுடன் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் சங்கிலியன் இன்று ஒரு தேசிய வீரனாக சித்திரிக்கப்படுகின்றான். அந்த தேசிய வீரனின் உரிமைக்குரல் அந்நிய ஆட்சியாளருக்கு எதிராக வீரத்துடன் ஒலிப்பதை இந்த நாடகத்திலும் கேட்க முடிகிறது.

பூதத்தம்பி ஒல்லாந்தர் காலத்தை களமாகக் கொண்ட நாடகம். பலராலும் அவ்வப்போது அரங்கேற்றப்பட்டு வந்துள்ள இசை நாடகம். இதை உரை நடை நாடகமாக ஆசிரியர் ஆக்கித் தந்துள்ளார். இசை நாடகமாக நடிப்பதற்கு ஏற்ற வண்ணம் இசை நாடக பாடல் சில பின் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன. மாற்றான் மனைவி மீது கொண்ட மோகத்தினால் விளைந்த சோகம், நிகழ்ந்த கொலை என்பவற்றை எடுத்துச் சொல்வதாக கடந்த காலத்தில் இந்த நாடகம் ஆடப்பட்டு வந்துள்ளது. ஆனால் இந்த நூலின் ஆசிரியர் மெற்றாஸ்மயில் இந்த நாடகத்தில் சில மாற்றங்களை தோற்றுவித்திருக்கின்றார்கள். அம் மாற்றங்கள் விடுதலை உணர்வை தூண்டி விடும் இயல்பினை கொண்டவையாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாண மண்ணின் சாதிய மோதல்களையும், வெளிப்பாட்டினையும் மூலத்திலிருந்து இருட்டடிப்புச் செய்யாமல் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இசை நாடக வடிவில் இந்த நாடகம் நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களின் துணைவியாரின் நினைவாக அண்மையில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ஆசிரியர் அனுபவங்கள்

நூலாசிரியர் மெற்றாஸ்மயில் நாடறிந்த நல்ல நடிகர். பாரம்பரிய கலைகளை பேணுவதும், அவற்றை ஆவணப்படுத்துவதும் தமது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்ற ஒருவர். பாரம்பரியமான நாடகங்கள் அல்லது கூத்துக்கள் தனித்து உரை நடையில் பெரும்பாலும் இல்லாத போதும், காலத்தின் தேவை அறிந்து இவற்றை ஆசிரியர் உருவாக்கியுள்ளார். ஆசிரியரின் நாடக அனுபவங்களின் வெளிப்பாடாக இந்த நாடகங்களைக் கண்டு கொள்ளலாம். நடிப்பதற்கும் படிப்பதற்கும் தகுந்த நாடகப் பிரதிகளாக இந்த நாடகங்கள் விளங்குகின்றன. படிக்கும் வாசகன் ஒருவனுக்கு இடையூறு இல்லாத வகையில் நடிக்க விரும்பும் நடிகனுக்கு வேண்டிய சில குறிப்புக்களையும் தமது அனுபவத்தின் வெளிப்பாடாக ஆசிரியர் தந்துள்ளார். ஆசிரியரின் உணர்ச்சி வேகம், இந்நாடகங்களில் சம காலக் குரலாக சிற்சில இடங்களில் ஒலிக்கின்றது. இத்தகைய இயல்பு யதார்த்தத்தை மீறியதாக வரலாற்று முரண்பாடு கொண்டதாக அமைந்துள்ளது என கருதுவதற்கு இடமில்லாமல் இல்லை. நூலின் அரங்க அட்டை, நூலின் உள்ளே கதை நிகழ்வை சித்தரிக்கும் ஓவியங்கள் என்பவற்றில் ஓவியர் ரமணி அவர்களின் முத்திரை பதிந்துள்ளது. சின்ன வன்னியனாகத் தோன்றும் மெற்றாஸ்மயிலின் கம்பீரமான தோற்றம் நூலின் பின்னட்டையை அழகுபடுத்துகின்றது. நாடக நூல்கள் தமிழில் போதுமான அளவு இல்லாதிருக்கும் நிலையில் மெற்றாஸ்மயில் இந்த நூல் பழைய மூன்று நாடகங்களை ஆவணப்படுத்துவதுடன் நடிக்க விரும்புகின்றவர்களுக்கு ஏற்புடைய பிரதிகளாகவும்அமைந்துள்ளனஎன்பது முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

நூல் ஆக்கம்:

செல்லையா மெற்றாஸ்மயில்

# இராணுவத்திலிருந்து தப்பியோடிய 65 பேர் மடக்கிப் பிடிப்பு

(கொழும்பு)

கடந்த மே மாதத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய 65 பேரை மடக்கிப்பிடித்திருப்பதாக நிக்கவரட்டியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுற்றிவளைப்புக்கள் மூலம் கைது செய்யப்பட்ட போது அவர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கிகள் 15, கிரனேட் 15 ஆகியனகைப்பற்றப்பட்டதாகவும் அவர்களில் 10 பேர் கொலை கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதன் காரணமாகத் தேடப்பட்டு வந்தவர்கள் எனவும் அவர்கள் தொடர்பான விசாரணை நடத்திவரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி காமினி அமரக்கோன் தெரிவித்தார்.

(உ)

## காணாமல் போன மூன்று மீனவர்களும் இந்தோனேசியாவில்

(கொழும்பு)

கடந்த மாதம் 26ந் திகதி வாழைச்சேனைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் காணாமல் போன மூன்று மீனவர்கள் இந்தோனேசியாவில் உயிருடனிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மூன்று மீனவர்களும் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் திசைமாறியதால் ஆழ்கடலில் தத்தளித்துக் கொண்டு இருந்த போது இந்தோனேசியக் கப்பலொன்று இவர்களைக் காப்பாற்றியது.

இம் மூவரை திருப்பி அழைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித்திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை அதேதினம் மீன்பிடிக்கச் சென்ற மேலும் நான்கு மீனவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை; (ந)

## புலிகளின் தடையைஅரசு நீக்கினால் அது பேச்சுக்கான சமிக்கையாகும்

### பி. பி. சி. யின் சிங்கள சேவைக்கு ஆயர் மல்கம்பேட்டி

(லண்டன்)

எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

இவ்வாறு ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நோர்வேத் தூதுவர் எரிக் சோல்ஹெய்மை ஆயர்கள் மல்கம் ரஞ்சித், இராயப்பு ஜோசப் ஆகியோர் சந்தித்திருந்தனர்.

இச்சந்திப்புத் தொடர்பாக நேற்று முன்தினம் ஆயர் மல்கம் ரஞ்சித் பி. பி. சியின் சிங்கள சேவைக்களித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், எரிக்சோலின் முயற்சிக்குத் தைரியம் கொடுப்பதற்காகவே தாம் அவரைச் சந்தித்ததாகவும், விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசு நீக்குமாயின் அது சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சிறந்த சமிக்கையாக இருக்குமென்றும் தெரிவித்தார்; [ந]

## வடக்கு-கிழக்கில் குடிசன மதிப்பீட்டை கைவிடுமாறு 10 கட்சிகள் கோரிக்கை

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

சமாதானப் பேச்வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப்புலிகள் மீதானதடையை நீக்குவதற்கு வற்புறுத்துமாறு சர்வதேசசமூகம் இலங்கைஅரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று நேற்று கொழும்பில்கூடிய பத்து தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைபற்றி ஆராய்வதற்காகப் பத்துத்தமிழ்க் கட்சிகள் நேற்று மாலை கொழும்பில் கூடியபோதே மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளனர்.

வடக்குகிழக்குமக்கள் இடம் பெயர்ந்து வாழும் இச்சந்தர்ப்பத்தில் குடிசனமதிப்பீட்டை நடத்தக்கூடாதென்றும்;

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இருபெண்கள் மீதான பாலியல்சித்திரவதை தொடர்பாக தமிழ்சட்டத்தரணிகள் ஒன்றுசேர்ந்து நீதவானைச்சந்தித்து விசாணைமேற்கொள்ள உதவ வேண்டுமென்று கோருவதென்றும் பாலியல்வன்முறைக்கு ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இவற்றை நடைமுறைப்படுத்த 10கட்சிகள் உள்ளடக்கிய இணைப்புக் குழுஒன்று தெரிவுசெய்ய ப்பட்டுள்ளது.

கல்முனைகரையோர மாவட்டம் அமைவது தொடர்பாக தமிழர் மகாசபையின் பிரதிநிதிகோபாலகிருஷ்ணன் அளித்த விளக்கத்தை அடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்வரைகல்முனைக் கரையோர மாவட்டக் கோரிக்கையை வலியுறுத்தாமல் இருக்குமாறு முஸ்லிம் காங்கிரசைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழர்விடுதலைக்கூட்டணி சார்பில்மாவைசேனாதிராசா எம்.பி யாழ்மாநகரமுதல்வர் ரவிராஜ்,ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பிசிறிகாந்தா மலையக மக்கள் முன்னணி எம்.பி பெ.சந்திரசேகரன், புளொட் சார்பில் பீற்றர்சிறிகந்தராசா, தமிழ்க்காங்கிரஸ் சார்பில் அ.விநாயகமூர்த்தி எம்.பி ந.குமரகுருபரன் மற்றும் தமிழ்கட்சித்தலைவர்களும் கலந்து கொண்டனர்; (வ)

### இளம்பெண்

தணிகாசலம் தவச்செல்வி என்ற இளம் பெண்ணை யாழ்பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 19ம் திகதி விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம)

### வில்பத்தில்

இத்தகவலை அடுத்துசம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு பொலிசாரும் இராணுவத்தினரும் விரைந்துசென்று புகைமண்டலத்தை அவதானித்துள்ளனர்.

இதனைஅடுத்து இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக விமானப்படைதலைமை அதிகாரிஅஜித் விஜயசுந்தர தெரிவித்துள்ளனர். (ம)

### விகாரமகாதேவி...

கிறது.

இதே வேளை, இருசாராருக்குமிடையேயான முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்படாத விடத்து மோதல்கள் தொடரக்கூடிய அபாயம்இருப்பதாகவும் நம்பப்படுறது (உ)


**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

அர்ஜுன், அபிதா
பிரகாஷ்ராஜ்
நடித்த

**வானவில்**

தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30[பு நே]
(கி-2051)


### விடுதலை

கிய தலைவர்கள் படைத்தளபதிகளுடன் ஆராய்ந்து வருவதுடன், யுத்த நிறுத்தத்தையும் தடைநீக்கத்தையும் அமுல் செய்யும் பட்சத்தில் ஏற்கக்கூடியபுதிய நிலைமைகளின் தாற்பரியங்கள் பற்றியும் ஆராய்ந்து வருவதாகவும், அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தடையை முழுமையாக நீக்காமல் தற்காலிகமாக நீக்குவது பற்றியே முக்கியமாக ஆராயப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன இதனை அடிப்படையாகக் கொண்டே நோர்வேயின் சமாதானத் தூதுவர்களுடனான பேச்சுக்கள அமையும்.

இதே வேளை ஓரளவு தடைநீக்கத்தை விடுதலைப் புலிகள் நிராகரிப்பார்களாயின், எதிர்க் கட்சிகளின் உடன்பாட்டுடன் அரசியற் சட்டத் திருத்தங்களைநிறைவேற்றி இனப்பிரச்சினைக்கு அவசரத் தீர்வொன்றைக் காணும் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படலாம் என்றும் மேற்படி வட்டாரங்கள தெரிவித்தன

அரசியற் தீர்விற்கான பிரச்சார நடவடிக்கைகளை அமைச்சர்கள் மங்கள சமரவீர, அனுரா பிரியதர்சன யாப்பா ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சர்வோதயம் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் சேவையும் பெறப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. [ந]

### மூவருக்கு அழைப்பு

பட்டதாரி ஆசிரியர்( நியமனம்தொடர்பாகசெல் விசுமதி குணம்-தம்பசிட்டி செல்வி தயாமதி தியாகராசா-கைதடி செல்வி விக்னேஸ்வரி ஈஸ்வரன் கைதடி ஆகியோரை வேலையற்றபட்ட தாரிகள் சங்கம் பணிமனைக்கு இன்று சமூகம் கொடுக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர் (வ)

## புலிகள் மீதான தடையை அரசு நீக்க வேண்டும்

### மகேஸ்வரன் எம். பி. கோரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையினை நீக்கி அவர்களுடன் இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்று ஐக்கியதேசியக்கட்சி எம். பி. தி. மகேஸ்வரன் நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அரசைக்கேட்டுக்கொண்டார்.

அவசரகால சட்ட நீடிப்பு விவகாரத்தின் போது உரையாற்றிய மகேஸ்வரன் எம்.பி மேலும் தெரிவித்திருப்பதாவது.

யாழ்ப்பாணத்திற்குவிமான சேவை போதியளவு இல்லாமையால் சுமார் 15 ஆயிரத்துக்குமேற்பட்ட மக்கள் இராணுவத்தினரின் அனுமதிக்காக காத்துகிடப்பதாக தெரிவித்தார்; (வ)

### சந்தேக நபர்

பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பதினொரு பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக போதிய சாட்சிகள் இல்லாததனால்.அவர்களை விடுதலை செய்வதாக பண்டாரவளை நீதிமன்ற நீதவான் ஏ கே.எம் பட்டபெந்தி தெரிவித்துள்ளார்:

இதேவேளை இந்தச்சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டதற்கு மனித உரிமை அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

முகாம் பொறுப்பதிகாரி, மற்றும் நான்கு கான்ஸ்டபிள்கள்உட்பட பதினொரு பேரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்; (ந)

### வவுனியாவில்

சத்தில் உள்ள கஜசிங்கபுர என்னும் பகுதியில் ரோந்து சென்ற பொலிசார் மீது விடுதலைப்புலிகள் நடத்தியதாக்குதலில் செனிவிரத்தின என்ற பொலிசார் கொல்லப்பட்டார்:

இச் சம்பவத்தில் ஊர்காவல் படையைச் சேர்ந்த திலகரட்ண என்பவர் படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மகாகச்சகொடி பிரப்பமடு வீதியில் இராணுவத்தினருக்கு உணவு கொண்டு சென்ற உழவுயந்திரம் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்காகிய போது அதில் சென்ற இரண்டு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்;

இவ்விருதாக்குதல் சம்பவங்களையடுத்துஅப் பகுதியில் பாரிய தேடுதல் நடாத்தப்பட்டபோதும் எவரும் கைதாகவில்லை: (ம)

### அரசு

யில் நேற்று முன்தினம் இடம்பெற்றபேச்சு வார்த்தையை அடுத்து, அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் நோர்வே மத்தியஸ்தம் வகிப்பதில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த மத்தியஸ்தம் அரசாங்க மட்டத்தில் இடம்பெற வேண்டுமென்பதிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டினால் இனப்பிரச்சினைத் தீர்வில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணையாளராக செயற்பட்டு வந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல் ஹெய்மின் சமாதானப் பணி முடிவுக்குவந்துள்ளதாகநோர்வேயின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன:

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சருக்கும், ஜனாதிபதிக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் பங்குபற்றுவது குறித்து இலங்கையின் வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை; இது இராஜதந்திரவட்டாரங்களில் பலத்த ஐயப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது; (வ)


எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்

செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில்.....



**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம்.

[கி-2003]

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியாவீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களதுஅச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;